005

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (இயற்கை விஞ்ஞானம்) - 2022/2023

மட்டம் - 05

இறுதிப்பரீட்சை –2023

**STU5513/STU6516– ஒப்பீட்டுக்கல்வியும் கல்வி சார் பிரச்சினைகளும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 24.11.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

## பகுதி – I

1. ஒப்பீட்டுக்கல்வி என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.
2. ஒரு இயற்கை விஞ்ஞான ஆசிரியராக ஒப்பீட்டுக் கல்வியை கற்பதன் நன்மைகள் மூன்றினை (03) விவரிக்குக.
3. பன்மைக்கலாசார கல்வியை வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்காவினால் முன்னெடுக்கப்பட்ட சல்விசார் அணுகுமுறைகள் மூன்றினை (03) பெயரிடுக.
4. ஒரு நாட்டில் தேசிய ரீதியில் ஒரு மொழிக் கொள்கையை வடிவமைப்பதன் நன்மைகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.
5. 1944 ஆம் ஆண்டு பட்லர் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கூட்டுப் பாடசாலை அமைப்பினை பெயரிடுக.
6. ஸ்கொலர்சல் ஆணைக்குழுவின் (Scholarchal Commission) முக்கிய இரண்டு (02) தொழிற்பாடுகளை விளக்குக.
7. 1960 களில் ஆசிரியல் கல்வியில் இடம் பெற்ற ஐந்து (05) மாற்றங்களைக் குறிப்பிடுக.
8. 1972 கலைத்திட்ட மறுசீரமைப்பில் கனிஷ்ட இடைநிலை கலைத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** இலங்கையில் புராதன கல்வி முறையில் மூன்று (03) பிரதான அணுகுமுறைகளையும் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினைச் (01) சுருக்கமாக விவரிக்குக. **(04 புள்ளிகள்)**

**ii.** நாட்டில் போர்த்துக்கேயர் கால கல்வியை விடவும் ஒல்லாந்தர் கால கல்வி மிகவும் முறையானதாகும்." இரண்டு (02) உதாரணங்கள் குறிப்பிட்டு ஆலோசனை செய்க. **(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் கல்வியில் மோர்கன் அறிக்கை பரிந்துரைகளின் முக்கியத்துவத்தை நான்கு (04) அம்சங்களினூடாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

10.

**i.** ஜப்பானில் மேஜி ஆட்சிக் காலத்தில் கல்வி மறுசீரமைப்பின் முக்கிய அம்சங்கள் நான்கினைப் (04) பெயரிடுக. **(06 புள்ளிகள்)**

**ii.** ஜப்பானில் ஆரம்பக்கல்வியில் இனங்காணக் கூடிய இரண்டு (02) பண்புகளை எமது நாட்டு ஆரம்பக்கல்வி முறையுடன் ஒப்பிட்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

iii. ஜப்பானின் உயர்கல்வியில் இனங்காணக் கூடிய பலங்கள் இரண்டினை (02) பெயரிட்டு, அவற்றை இலங்கை கல்வியில் எவ்வாறு பயன்படுத்தமுடியும் என்பதை விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

11.

**i.** கல்வியில் உள்ளக வினைத்திறன் அத்துடன் வெளியக வினைத்திறன் ஆகிய இரண்டிற்றுமிடையிலான வேறுபாட்டை விளக்குக. **(04 புள்ளிகள்)**

**ii.** இலங்கையில் கல்வியின் உள்ளக வினைத்திறனை பலவீனப்படுத்துவதில் பங்குவகிக்கும் காரணங்கள் நான்கினை (04) விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் கல்வியின் உள்ளக வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்படக் கூடிய நான்கு (04) உத்திகளை முன்வைக்குக. **(08 புள்ளிகள்)**

12.

**i.** உலகமயமாதல் எண்ணக்கருவிற்கான உமது சொந்த வரைவிலக்கணத்தை கட்டமைக்குக. **(04 புள்ளிகள்)**

**ii.** இயங்கை விஞ்ஞானத்திற்கான கற்பித்தலை விளைதிறன் மிக்க வகையில் மேற்கொள்ள உலக மயமாக்கலின் விளைவாக ஏற்படும் புதிய போக்குகளை திறம்பட பயன்படுத்தக்கூடிய நான்கு (04) வழிகளை விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** உலகமயமாதலின் காரணமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கல்விமுறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினை (02) ஆலோசனை செய்க. **(08 புள்ளிகள்)**

13.

**i.** ஒரு இயற்கை விஞ்ஞானபாட ஆசிரியராக நீர் உமது வகிபங்கில் விருத்தி செய்ய வேண்டிய நான்கு (04) விசேட பண்புகளைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

**ii.** ஒரு இயற்கை விஞ்ஞானபாட ஆசிரியராக கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறையில் நீர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நான்கினை (04) விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** மேலே நீர் குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் நான்கினை (04) கலந்துரையாடுக. **(08 புள்ளிகள்)**

பகுதி – **II 20 x 03 = 60** புள்ளிகள்
மொத்தம் = 100 புள்ளிகள்

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*